தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 19, பிரமோதூத — திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, மே 2, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.''

பொறுமையாகச் செயற்பட வேண்டிய காலத்தில், கொக்கு போல் அமைதியாக இருக்க வேண்டும்; காலம் வாய்த்தபொழுது அதன் குத்துப்போல, தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

பொதுப் பணி ஆற்றுவோருக்கு இஃது ஓர் இலக்கணமாகும்.

1. வினாக்கள்—விடைகள்.
உடுக்குறியிட்ட வினாக்கள்.

கள்ளத்தனமாக கரும்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுத்தல்.

*2770 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டில் கள்ளத்தனமாகக் கரும்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கனிமக்குத்தகை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள கரும்பாறை குவாரிகளில் பாறைகள் உற்பத்தி மற்றும் இரும்பு ஆகியவைகளை சுரங்கம் மற்றும் கனிமத்துறையின் மாவட்ட அதிகாரிகளால் தணிக்கை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெட்டி எடுக்கப்பட்டு, சீர் செய்யப்பட்ட ஏற்றுமதிக்கு உகந்த அளவு பாறைகளைக் குவாரியிலிருந்து வெளியே எடுத்துச் செல்ல குத்தகைதாரர், மாவட்ட அதிகாரிகளிடமிருந்து பெர்மிட் பெற வேண்டும். இதனால், கள்ளத்தனமாக வெளியே எடுத்து செல்வது தடுக்கப்படுகிறது. ஒவ்வொரு அனுமதிச் சீட்டிலும் எடுத்துச் செல்லப்படும் பாறைகளின் எண்ணிக்கை, கனபரிமாணம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. ஏற்றுமதிக்காக எடுத்துச் செல்லப்படும்போது, சோதனைச் சாவடிகளிலும் திடீர் சோதனைகள் செய்யப்படுகின்றன. குத்தகை வழங்கப்பட்ட குவாரிகளுக்குப் பக்கத்திலே உள்ள குத்தகை வழங்கப்படாத இடங்களும் மாவட்ட அதிகாரிகளால் கண்காணிக்கப் படுகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து கள்ளத்தனமாக கரும்பாறைகளை வெட்டியெடுத்துச் செல்வதாக, பல்வேறு புகார்கள் பத்திரிகை யிலும் சரி—செய்தியாகவும் இன்றைக்குச் சொல்லப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு இதுவரையில் எத்தனை வந்திருக்கின்றன? அவைமீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிக் குறிப்பிட்டு புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது போன்ற புகார்கள் ஏதேனும் வந்தால், அதனை அரசுக்கு அனுப்பி வைத்தால், ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த 3 ஆண்டுகளில், சிறு கனிமங்களின் மூலம் பல்வேறு தவறுகளுக்காக வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை 1986-87-இல் ரூ. 5.64 லட்சமும், 1987—88-இல் ரூ. 10.35 லட்சமும், 1988—89-இல் ரூ. 15 லட்சமும் ஆகும். இவையெல்லாம், அங்கு நடைபெற்ற தவறுகள், சில முறைகேடுகள் ஆகியவற்றுக்காக வசூலிக்கப்பட்ட அபராதமாகும். அஃதன்னியில், பெருமளவுக்குக் கள்ளத்தனமாகக் கற்கள் கொண்டு போவதாகப் புகார்கள் அரசுக்கு வரவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிமப் பாறைகளை வெட்டுவதற்காக குத்தகை கொடுக்கின்ற நேரத்தில், புவியியல் ஆராய்ச்சியின் மூலமாக எவ்வளவு கிடைக்கும் என்பதை அதிகாரிகள் ஆராய்ந்து, அந்தக் குத்தகையை நிர்ணயம் செய்கிறார்களா? அப்படி இல்லை யென்றால், எந்த அடிப்படையில் அப்படிப்பட்ட குத்தகை நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே எந்த அளவுக்கு, எவ்வளவு ஆழத் திலே கனிமப் பொருள் இருக்கிறது—அந்தக் கல் இருக்கிறது என்பதெல்லாம் கணக்கிடப்பட்டு, அதன் மூலம் எவ்வளவு வெட்டியெடுக்க முடியும் என்பது கணக்கிடப்பட்டு, பத்தாண்டு காலத்திற்கு, முதல் தடவையாக குத்தகை வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற அந்தக் குத்தகையிலே கூட, குத்தகை எடுத்தவர்கள், இரண்டு ஆண்டுக் காலத்திற்குள்ளாக தொழிற் சாலையை அமைக்க வேண்டுமென்ற நிபந்தனையோடுதான் குத்தகை வழங்கப்படுகிறது.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாறைகள் 'டாமின்' நிறுவனம் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ் வாறு ஏற்றுமதி செய்த வகையிலே இந்த அரசுக்கு எவ்வளவு லாபம், எவ்வளவு நஷ்டம் என்பதையும், ஆண்டு வாரியாக எவ்வளவு லாப நஷ்டங்கள் கணக்கிடப்பட்டுள்ளன என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

1990 மே, 2]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த இரண்டு கேள்விகளையுமே, திரு. பெரியசாமி அவர்கள் கேட்ட கேள்வியிலே இணைத்து எடுத்திருக்கலாம். ஏனென்றால், அதற்குரிய விளக்கங்களில், எனக்குள்ள தகவலின்படி, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற வினாவிற்கு, விளக்கமான பதிலாகத் தரவேண்டுமேயானால், 1985—86-இல் இந்த 'டாமின்' மூலம் ஈட்டிய மொத்த இலாபம் 134 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு போக நிகர இலாபம் 55 இலட்சம் ரூபாய்தான். 1986—87-இல் மொத்த இலாபம் 157 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு போக நிகர இலாபம் 73 இலட்சம் சொச்சம் ரூபாய்தான். 1987—88-இல் மொத்த இலாபம் 214 இலட்சம் ரூபாய். ஆனால் நிகர நஷ்டம் 11.27 இலட்சம் ரூபாய். 1988—89-இல் மொத்த இலாபம் 227.81 இலட்சம் ரூபாய். நிகர இலாபம் 211.98 இலட்சம் ரூபாய். அதற்கு முன்பெல்லாம், 1988—89-க்கு முன்பெல்லாம் மொத்த இலாபம் அதிகமாகவும், செலவு அதிக மாகவும் இருந்து நிகர இலாபம் மிகக் குறைவாக இருந்திருக்கிறது. 1988—89-இலே தான் ஒரு திருப்புமுனை ஏற்பட்டு, மொத்த லாபம் 227 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் 211 இலட்சம் ரூபாய் என்று வந்திருக்கிறது. 1989—90-இல் மொத்த இலாபம் 564 இலட்சம் ரூபாய். நிகர இலாபம் 541 இலட்சம் ரூபாய்.

9-05 மணி

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் அதிகாரப்பட்டி கிராமத்திலே உள்ள பட்டா நிலத்திலே கருங்கல் வாங்கிக்கொண்டு பக்கத்திலே இருக்கக்கூடிய ஃபாரஸ்ட் குன்றிலே வந்து கருங்கல் வெட்டப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் 16, பிப்ரவரி 1990-இல் மனு கொடுத்து, நடவடிக்கை இல்லையெனில் உண்ணாவிரதம் இருப்போம் என்று சொன்ன தகவல் அரசுக்கு வந்ததா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இங்கே நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி கேட்டால் நலமாக இருக்கும். அது மாத்திரமல்ல, அது குறித்த விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடு எனக்குத் தருவாரேயானால்,மேற்கொண்டு என்ன நடவடிக்கை கள் எடுக்கப்பட்டன என்பதையறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கருப்புக்கல் தொழிற்சாலை.

*5480 திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :